1984 மார்ச் 14]

தேசிய அளவிலே, உலக அளவிலே சுற்றுலா மையங்கள் என்பது இயற்கையாக அமைந்திருக்கின்ற அந்தச் சூழ்நிலையில் உருவாக்கப்பட்டு வருகின்றன, அப்படி சுற்றுலாப் பயணிகள் வருவதை வைத்து அங்கே அடிப்படை வசதிகள் (infrastructure facilities) செய்து தரப்படுகின்றன.

தஞ்சையைப் பொறுத்த வரையில், புகழ் பெற்ற ஆலயமும் அதைச் சுற்றி நல்ல சிறப்புமிக்க இயற்கைக் காட்சிகளும், சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களும் இருப்பதால், அதைச் சுற்றுலா வளர்ச்சிக்குரிய மையமாக அரசு கருதியிருக்கிறது. ஆகவே தமிழ் நாடு ஓட்டல் அங்கே நடத்தப்பட்டு வருகிறது. அதைப் போலவே பல ஓட்டல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தேவைப்பட்ட இடத்திலே படுக்கைகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப் படுகிறது. இளைஞர்கள் விடுதி என்ற அமைப்பின் மூலம் குறைந்த செலவில் தங்கும் வசதிகள் செய்யப்படுகின்றன. தனியாகக் கேள்வி கேட்டால், அதைப்பற்றிய கருத்துக்களைத் திரட்டி நல்ல விவரங்களைத் தர முடியும்.

வேப்ப மரங்கள்.

* 91 வினா—திரு. க. அருணாசலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) வேப்ப எண்ணெய் வளத்தைப் பெருக்கும் பொருட்டு, வேப்ப மரங்களை மானாவாரிப் பகுதிகளில் வளர்ப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) எண்ணெய் வித்துக் குறைவை நிறைவாக்குவதில் வேப்ப வித்துக் களின் இடம் பற்றி ஆராய்ச்சி ஏதும் நடைபெற்றுள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன் முடிவுகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (இ) வேப்ப மரங் களை மானாவாரிப் பகுதிகளில் வளர்ப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(உ) எந்தெந்த வருடாந்திரப் பயிர்களுடன் வேப்ப மரத்தைப் பயி ரிட்டுப் பயனடையலாம் என்பது பற்றியும் மற்றும் வேளாண்மை காடுவளர்க் கும் திட்டத்தின்கீழ் எரிபொருள், தீவனம், மரம் ஆகியவற்றிற்காக வளர்க்கப் படும் மரங்களில் வேப்ப மரத்தையும் சேர்த்துக் கொள்ளலாமா என்பது பற்றியும் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ந்து வருகிறது.

(எ) திட்டங்களின் கீழ் கிடைக்கப்பெறும் முடிவுகள் துறைகளுக்கு மேற்கொள்வதற்காக அவ்வப்போது கொடுக்கப்படுகின்றன.

திரு. க. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மானாவாரிப் பிரதேசங்களில் வேப்ப மரங்களைப் பயிரிடுவதுபற்றி ஆராய்ச்சி செய்யவில்லை என்று சொன்னார்கள். பொதுவாக இந்த மரம் பயனுள்ளதாக இருப்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறோம். மானாவாரிப் பிரதேசங்கள் நம்முடைய மாநிலத்தில் பரவலாக இருக்கின்றன. வேப்ப மரம் பயிரிடுவதனாலே வளர்ச்சியும் ஏற்படுகிறது. ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம் செலவிட்டு ஏராளமாகப் பொருக்குகிறவர்களுக்கு மறு வாழ்வும் கிடைக்கிறது. சிறு குழந்தைகளும் பொருக்குகிறார்கள். அவர்களுக்கு அறிவும் வளர்கிறது. இதையெல்லாம் அனுசரித்து இப்போது ஆராய்ச்சி இல்லாமல் இருந்தாலும், இனிமேலாவது அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து விரிவாக நம்முடைய மாநிலத்திலே மானாவாரி நிலங்களில் வேப்ப மரங்களைப் பயிர் செய்யலாம் என்பதைப் பற்றி இந்த அரசு ஆராய்ச்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு காடு வளர்ப்பு பற்றிய புள்ளி விவரங்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் கொடுத்திருப்பதைப் பார்த்தால் யூகலிப்டஸ் மரங்களுக்கு பிரதான இடம் கொடுத்திருப்பதாகத் தோன்றவில்லை. அந்த இடங்களிலே கூட வேப்ப மரங்களை வைக்கலாமா என்பதுபற்றியும் கூட்டாக இந்த அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரசின் நடவடிக்கையில் இல்லை என்று தான் குறிப்பிட்டேன். வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதுபற்றி ஆராய்ந்து வருகிறது. ஆனால் வேப்ப மரம் அதிகமான நிழலைக் கொடுக்கின்ற காரணத்தால், அது வயல் வரம்புகளில், பண்ணை ஓரங்களில் வைக்கிறபோது, பயிர்கள் பாதிக்கப்படுமென்கிற கருத்து சொல்லப்படுகிறது. நெடுஞ்சாலைகளில், அலுவலகச் சுற்றுப்புறங்களில் அவைகளை வைப்பதுபற்றி அரசு திட்டவட்டமாக ஆராய்ந்து வருகிறது. அதிலே கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்புகளைப் பற்றிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அது பெரும்பாலும் பழம் கிடைப்பது ஜூன், ஜூலை மாதங்களாக இருக்கின்ற காரணத்தினால், அவை அறுவடைக் காலங்களாக இருக்கின்ற காரணத்தினால், கிராமப்புறத்து மக்கள் அந்த நேரத்திலே இந்த

முயற்சியில் ஈடுபடுவதற்குத் தடையாக இருக்கிறது. அதோடு வேப்ப எண்ணெய் என்பது உணவு எண்ணையாக இல்லாத காரணத்தினால், அதை அதிகமாகப் பயன்படுத்தக் கூடிய நிலைமையில் இல்லை. அவைகளைப் பது னிட்டு, அவைகளுக்கு ஆகின்ற செலவுகளையும் அதனால் கிடைக்கக் கூடிய ஆதாயத்தையும் கணக்கிட்டுப் பார்க்கின்றபோது, ஆதாயம் குறைவாக இருக் கிறதென்று சொல்கின்ற நிலைமை இருக்கிறது. என்றாலும் இவைகள் எல்லா வற்றையும் கருத்தில் எடுத்துக்கொண்டு வேப்ப மரத்தை அதிகமாக வளர்ப்ப தற்குரிய செயல் திட்டத்தை அந்தப் பல்கலைக் கழகம் ஆராய்ந்து கொண் டிருக்கிறது.

திரு. க. அருணாசலம்: தலைவர் அவர்களே, வேப்ப எண்ணெய் உணவு எண்ணெயாகப் பயன்படுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார் எண்ணெயாகப் பயன்படுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித் தார்கள். லக்னோவில் இருக்கிற போட்டானிகல் கார்டன் ஆராய்ச்சி நிலையத்திலே ஆராய்ச்சி பண்ணி, அதிலே இருக்கிற கசப்பைத் தனியாக எடுத்துவிட்டால், உணவாகவும் பயன்படுத்தலாம், பயன்படுத்துகிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அதோடுகூட பாரம்பரியமாக நம்முடைய நாட்டிலே பலர் அதை உணவாகவும் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது பற்றியும் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வேப்ப எண்ணெயில் இருக்கிற கசப்பை எடுத்து அதை உணவு எண்ணெயாகப் பயன் படுத்துவதை விட, நேரிடையாகவே உணவு எண்ணெயாகப் பயன்படுத்து வதற்குரிய எண்ணெய்கள் இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்கள் எல்லாம் பல்கலைக் கழகத்தி னுடைய ஆராய்ச்சிக்கு அனுப்பப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Parthenium

*92 *Q.*—THIRU S. J. SADIQ PASHA: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether it is a fact that the Tamil Nadu Agricultural University has identified Parthenium as a useful green manure and that it increases the paddy yield; and

(*b*) if so, the details thereof?